ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# நம்பெருமாள் திருஅத்யயன மகோத்ஸவ வைபவம்



நம்பெருமாள் ரத்னங்கி சேவை – வைகுண்ட ஏகாதசி அன்று

## ஸ்ரீரங்கநாதஸ்தோத்ரம் (ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது)

ஸப்தப்ராகா மத்யே ஸரஸிஜ முகுளோத் பாஸமாநே விமாநே
காவேரீ மத்யதேஸே ம்ருதுதர பணிராட்போகபர்யங்க பாகே /
நித்ராமுத்ராபி ராமம் கடிநிகடஸிர: பார்ஸ்வவிந்யஸ்தஹஸ்தம்
பத்மாதாத்ரீகராப்யாம் பரிசத சரணம் ரங்கராஜம் பஜேSஹம் //

ஸ்ரீ:



நம்மாழ்வார், திருவரங்கம் - நாச்சியார் திருக்கோலம்
புகைப்பட உதவி: ஸ்ரீராஜகோபால் கண்ணன், திருவரங்கம்

## திருவத்யயன மகோத்ஸவத்தின் மகிமை

திருங்கையாழ்வார் தமது ஆறு திவ்ய ப்ரபந்தங்களையும் அருளிச்செய்த பின்பு ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளித் திருநெடுந்தாண்டகத்தை தேவகானத்தில் இசைத்துப்பாட, அதனால் திருவுள்ளமுகந்த பெரியபெருமாள் `உமக்கு வேண்டிய வரம் பெற்றுக் கொள்ளும்` என்று நியமத்தருளினார். பரகாலரும் நம்பெருமாள் மார்கழி மாதத்தில் கண்டருளிகிற அத்யயந உத்ஸவத்தில் `நம்மாழ்வார் அருளிச்செய்த த்ராவிட வேதத்தையும் (திருவாய்மொழியையும்) திருச்செவி சாத்தியருளவேணும்' என்று பிராத்திக்க, பெருமாள் அவ்வண்ணமே அருள்புரிந்தார். அதன்படி மங்கைமன்னன் வருடந்தோறும் அர்ச்சாருபியான நம்மாழ்வாரை ஆழ்வார் திருநகரியிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளிச் செய்து அவர் முன்னிலையிலே உபய வேத பாராயாணத்தையும் சிறப்பாக நடக்கச்செய்து, வைகுண்ட ஏகாதசி தொடக்கமாக பத்து நாட்கள் மஹோ உத்ஸவாமாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார். உத்ஸவம் முடிந்த பிறகு பராங்குஸரை மீண்டும் திருக்குருகூருக்கு எழுந்தருளப் பண்ணுவித்து வந்தார்.

ஸ்ரீமந்நாதமுனிகள் திருமங்கையாழ்வாரால் நடத்தப்பட்டு பிறகு நின்று போயிருந்த அத்யயன உத்ஸவத்தை முன்புபோலவே நடைபெறுமாறு ஏற்பாடு பண்ணினார்.

பெரியபெருமாள் திருவாய்மொழிக்கு வேதத்துக்கு ஒப்பான நிலையை அனுக்ரகிக்கையாலே வேதங்களுக்கு அத்யயந, அநத்யயந காலநியமங்கள் உள்ளதுபோல, நாலயிர திவ்வயப் பிரபந்தத்திற்கும் திருக்கார்த்திகை தொடங்கி அநத்யயந காலமென்றும், மார்கழி மாதம் அத்யயந உத்ஸவம் தொடங்கும் நாளை அத்யயன கால தொடக்கமென்றும் ஏற்படுத்தினார். அநத்யயன காலத்தில் நாலயிர திவ்வயப் பிரபந்தத்தை அநுசந்தானம் செய்வது வழக்கம் இல்லை.

அத்யயன உத்ஸவம் முடிந்து பல்லாண்டு தொடக்கம் ஒவ்வொரு திவ்யதேசங்களில் வேறுவேறு தினங்களில் நடைபெறுகிறது. திருவரங்கத்தில் தாயார் சன்னதியில் இயற்பா சாற்றுமுறை ஆன பிறகு பல்லாண்டு தொடக்கம் முதலாழ்வார் சன்னதியில் நடைபெறுவது வழக்கம்.

ஸ்ரீமந்நாதமுநிகள் அத்யயன உத்ஸவம் நடக்கும் காலத்தில் முதல் இரண்டு ஆயிரத்தில் அடங்கும் ப்ரபந்தங்கள் பகல் பத்து நாட்களிலும், திருவாய்மொழியை இரவு பத்து நாட்களிலும், இயற்பா ப்ரபந்தங்கள் முழுவதும் திருவாய்மொழி சாத்துமுறையான அடுத்தநாள் சேவிக்கும்படியும் ஏற்பாடு செய்தார். ஆக இருபத்தொருநாளாக ஸ்ரீமந்நாதமுநிகள் காலம் தொடங்கி அத்யயன உத்ஸவம் ஸ்ரீரங்கத்தில் நடந்து வந்தது.

பட்டர் காலத்தில் திருநெடுந்தாண்டகத்திற்குள்ள சிறப்பை நோக்கிப் பகல் பத்துக்கு முந்தின நாள் திருநெடுந்தாண்டக உத்தஸவமும் சேர்க்கப்பட்டு மொத்தம் இருபத்தியிரண்டு நாட்களாக ஸ்ரீரங்கத்தில் மட்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. மற்றயதிவ்யதேசங்களில் இந்த உற்சவம் இருபத்தொரு நாட்கள் நடைபெற்று வருகிறது.

(மேலே குறிப்பிட்ட விஷயங்கள் புத்தூர் ஸ்வாமியினால் தொகுத்து அருளப்பட்ட திருமங்கையாழ்வார் வைபவம் மற்றும் ஸ்ரீமந்நாதமுநிகள் வைபவ நூல்களில் இருந்து எடுக்கப்பட்டது)

பகல்பத்து இராப்பத்து திருநாட்களில் ஸ்ரீரங்கத்தில் அரையர் சேவாகாலக் க்ரமம் (ஸ்ரீரங்கம் கோயில் உற்சவங்கள், திருநாட்கள் விபர நாட்காட்டி புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது)

<u>திருநெடுந்தாண்டகம்</u>

கர்ப்பக்கிரஹத்தில் திருநெடுந்தாண்டகம் தொடக்கம்

சந்தனு மண்டபத்தில் - **மின்னுருவாய் முன்னுருவில்** திருநெடுந்தாண்டகம் முதல் பாசுர அபிநயம், வ்யாக்யானம் (தம்பிரான்படி வ்யாக்யானம்)

<u>பகல் பத்து - திருமொழித்திருநாள் - அர்ச்சுண மண்டபம்</u>

முதல் திருநாள் - திருப்பல்லாண்டு பாசுரம், அபிநயம், வ்யாக்யானம் பெரியாழ்வார் திருமொழி 190 பாசுரங்கள்

இரண்டாம் திருநாள் -ஆற்றிலிருந்து (2-10-1), தன்னேராயிரம் பிள்ளைகளோடு (3-1-1)- பாசுரங்கள், அபிநயம் வ்யாக்யானம் - திருமொழி 240 பாசுரங்கள்

மூன்றாம் திருநாள் - சென்னியோங்கு (5-4-1) பாசுரம், அபிநயம், வ்யாக்யானம்
திருபொலிந்த சேவடி 7ஆம் பாசுரம் வரை அபிநயம்
அரையர் ஸ்ரீசடகோபம் சாதித்தல்
திருப்பாவை - மார்கழித்திங்கள் பாசுரம், அபிநயம், வ்யாக்யானம்
நாச்சியார் திருமொழி 120 பாசுரங்கள்

நான்காம் திருநாள் - கண்ணன் என்னும் கருந்தெய்வம்
(நாச்சியார் திருமொழி – 13-1), இருளரியச்சுடர்மணிகள் (பெருமாள் திருமொழி 1-1)
பாசுரங்கள், அபிநயம், வ்யாக்யானம்
பெருமாள்திருமொழி, திருச்சந்த விருத்த பாசுரங்கள்
இரண்டாம் அரையர் சேவை - கம்சவதம்

ஐந்தாம் திருநாள் - திருமாலை – காவலில் புலனைவைத்து முதல் பாசுரம்
அபிநயம், வ்யாக்யானம் அரங்கனார்க்கு ஆட்செய்யாதே 6ஆம் பாசுரம் வரை
அபிநயம், அரையர் திருவாராதனம்
திருமாலை, திருபள்ளியெழுச்சி பாசுரங்கள், அமலநாதிபிரன் முதல் பாசுரம்,
அபிநயம், வ்யாக்யானம், பாசுரங்கள்

ஆறாம் திருநாள் - கண்ணிநுண் சிறுத்தாம்பு முதல்பாசுரம்,
வாடினேன் வாடி - பெரிய திருமொழி முதல் பாசுரம், அபிநயம், வ்யாக்யானம்
பெரிய திருமொழி - 250 பாசுரங்கள்

ஏழாம் திருநாள் - தூவிரிய மலருழக்கி (பெரிய திருமொழி 3-6-1) பாசுரம்,
அபிநயம், வ்யாக்யானம்
பெரிய திருமொழி - 210 பாசுரங்கள்
2ஆம் அரையர்சேவை - வாமனா அவதாரம்

எட்டாம் திருநாள் - பண்டைநான்மறையும் (பெரிய திருமொழி 5-7-1) பாசுரம்,
அபிநயம், வ்யாக்யானம் பெரிய திருமொழி - 250 பாசுரங்கள்
2ஆம் அரையர்சேவை - அம்ருதமதனம்

ஒன்பதாம் திருநாள் - தெள்ளியீர்! தேவர்க்கும் தேவர்திருத்தக்கீர் (பெரிய திருமொழி
8-2-1) பாசுரம், அபிநயம், வ்யாக்யானம்
பெரிய திருமொழி - 200 பாசுரங்கள்
2ஆம் அரையர்சேவை - முத்துக்குறி - வ்யாக்கியானம்
மின்னுருவாய் முன்னுருவில் - திருநெடுந்தாண்டகம் முதல் பாசுரம், அபிநயம்,
வ்யாக்யானம்
அரையர் தீர்த்தம் ஸ்ரீசடகோபம் சாதித்தல்

பத்தாம் திருநாள் - நம்பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம்
இரக்கமின்றி எங்கோன் செய்ததீமை (பெரிய திருமொழி 10-2-1) பாசுரம், அபிநயம் வ்யாக்யானம்
பெரிய திருமொழி - 170 பாசுரங்கள்
திருக்குறுந்தாண்டகம் - 20 பாசுரங்கள்
திருநெடுந்தாண்டகம் - 30 பாசுரங்கள்
2ஆம் அரையர்சேவை - இராவணவதம்
பெரிய திருமொழி சாற்றுமறை
அரையர் தீர்த்தம் ஸ்ரீசடகோபம் சாதித்தல்
ஆழ்வார்கள், ஆசார்யர்கள் மரியாதை கருட மண்டபத்தில் நடைபெறும்

இராபத்து - திருவாய்மொழித் திருநாள் - திருமாமணி மண்டபம் (ஆயிரங்கால் மண்டபம்)

முதல் திருநாள் - வைகுண்ட ஏகாதசி - நம்பெருமாள் - ரத்தனங்கிசேவை
பெரியபெருமாள் - முத்தங்கி சேவை (இராபத்து முதல் 7 நாட்கள்)
உயர்வர உயற்நலம் திருவாய்மொழி முதல் பாசுரம், அபிநயம் வ்யாக்யானம்
முதல் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

இரண்டாம் திருநாள் - கிளரொளி இளமை (திருவாய்மொழி 2-10-1) பாசுரம், அபிநயம் வ்யாக்யானம்
இரண்டாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

மூன்றாம் திருநாள் - ஒழிவில் காலம் (திருவாய்மொழி 3-3-1) பாசுரம் அபிநயம் வ்யாக்யானம்
மூன்றாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

நான்காம் திருநாள் - ஒன்றும் தேவும் (திருவாய்மொழி 4-10-1) பாசுரம் அபிநயம் வ்யாக்யானம்
நான்காம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

ஐந்தாம் திருநாள் - ஆராவமுதே (திருவாய்மொழி 5-8-1) பாசுரம் அபிநயம் வ்யாக்யானம்
ஐந்தாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

ஆறாம் திருநாள் - உலகமுண்ட பெறுவாய (திருவாய்மொழி 6-10-1) பாசுரம் அபிநயம் வ்யாக்யானம்
ஆறாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

ஏழாம் திருநாள் - நம்பெருமாள் திருக்கைத்தல சேவை
நம்மாழ்வார் நாச்சியார் திருக்கோலம்
கங்குலும் பகலும் (திருவாய்மொழி 7-2-1) பாசுரம் அபிநயம் வ்யாக்யானம்
ஏழாாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்
இரண்யவதம்
அரையர் தீர்த்தம் ஸ்ரீசடகோபம் சாதித்தல்

எட்டாம் திருநாள் - மாலை திருமங்கை மன்னன் வேடுபறி – நம்பெருமாள் குதிரை வாகனத்தில் வையாளி - வாடினேன் வாடி பதிகம் அரையர் சேவித்தல் (கலியன் பாட்டு)

இரவு நெடுமாற்கடிமை (திருவாய்மொழி 8-10-1) பாசுரம் அபிநயம் வ்யாக்யானம்
எட்டாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

ஒண்பதாம் திருநாள் - மாலை நண்ணி (திருவாய்மொழி 9-10-1)பாசுரம் அபிநயம் வ்யாக்கியானம்
ஒன்பதாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்

பத்தாம் திருநாள் - நம்மாழ்வார் மோசஷம் - திருவாய்மொழித்திருநாள் சாற்றுமறை
காலை தீர்த்தவாரி
இரவு - தாளதாமரை (திருவாய்மொழி 10-10-1) பாசுரம் அபிநயம் வ்யாக்கியானம்
பத்தாம் திருவாய்மொழி - 100 பாசுரங்கள்
திருவாய்மொழி சாற்றுமறை

நம்மாழ்வார் மோசஷம் (பதினொன்றாம் நாள் அதிகாலை நடைபெறும்)
அரையர் தீர்த்தம் ஸ்ரீசடகோபம் சாதித்தல்
ஆழ்வார் ஆசார்யர்கள் மரியாதை

பதினொன்றாம் நாள் - இயற்பா சாற்றுமறை

இரவு கர்ப்பக்கிரஹத்தில் இயற்பா தொடக்கம்

சந்தன மண்டபத்தில் இயற்பா பாசுரங்கள் முழுவதும் அநுசந்திக்கப்படும்
மறுநாள் அதிகாலை மூலஸ்தானத்தில் இயற்பா சாற்றுமறை
திருத்துழாய் தீர்த்த விநியோக கோஷ்டி நடைபெறும்.

<u>மங்கள ஸ்லோகம்</u>

லஷ்மி சரண லாசஷாங்க ஸாசஷாச்ச்ரீவத்ஸ வசஷஸே /
சேஷமங்கராய ஸர்வேஷாம் ஸ்ரீரங்கேஸாய மங்களம் //

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: